# நிகழ்ச்சிகள் மற்றும் செயலாற்றுகை பற்றிய அறிக்கை

# 2014

## இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்

இல. 248 – 1/1, காலி வீதி, கொழும்பு- 04

**மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு**

இல. 146, காலி வீதி, கொழும்பு - 03

## பணிப்பாளரின் செய்தி



இலங்கையில் இந்து சமயத்தினையும், கலாசாரத்தினையும் பாதுகாத்தல், விருத்திசெய்தல் மற்றும் பரப்புதலுக்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் 1986 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டது. தற்போது இத்திணைக்களமானது மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும் இந்துமத விவகாரங்கள் அமைச்சின் கீழ் இயங்குகின்றது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினது 2014 ஆம் ஆண்டுக்குரிய முன்னேற்ற அறிக்கை மற்றும் வருடாந்த கணக்குகள் பற்றி ஒரு சில விடயங்களை இவ்விடத்தில் தெரிவித்தல் பொருத்தமானதாகும். 2014 ஆம் ஆண்டில் எமது திணைக்களமானது அரசாங்க கொள்கைகளுக்கு அமைவாக எதிர்பார்க்கப்பட்ட திணைக்களத்தின் முக்கியமான பங்கினை வினைத்திறனுடனும் பயனுறுதிவாய்ந்ததாகவும் அடைய முடிந்ததையிட்டு பெருமை கொள்கின்றேன்.

திணைக்களத்தின் வினைத்திறனான செயற்பாடுகள் முன்னேற்றமடைந்துள்ளமைக்கு புதிதாக உள்ளீர்க்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக சகல உத்தியோகத்தர்களினதும் கடின உழைப்பும் அர்ப்பணிப்புமே காரணமாக அமைந்துள்ளது. 365 நாட்களாக செயற்படுத்தப்பட்ட சகல நடவடிக்கைகளையும் பட்டியல்படுத்துவது மிகவும் கடினமான காரியமாகும். ஆனால் பிரதான நிர்வாக மற்றும் நிதிச் செயற்பாடுகளைச் சுருக்கமாகப் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எமது திணைக்களத்தின் செயற்பாடுகளுக்கு முழுமையான ஆதரவினையும் ஒத்துழைப்பினையும் நல்கிய கௌரவ அமைச்சர்கள், கௌரவ மாகாணசபை உறுப்பினர்கள், அரச நிறுவனங்கள் மற்றும் ஏனைய பங்காளிகளான இந்துசமய துறவிகள், குருமார்கள், கல்விமான்கள், நிறுவனங்கள், ஆலய அறங்காவலர்கள் மற்றும் அறநெறிப் பாடசாலைகளுக்கும் எனது ஆழமானதும் உண்மையானதுமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உண்மையில், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பொறுப்புக்களை மிகவும் வெற்றிகரமாகச் செயற்படுத்தும் எமது முயற்சிகளுக்கு புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சின் செயலாளரிடமிருந்து முழுமையான ஒத்துழைப்பு கிடைத்தமையையிட்டு நான் மிகவும் அதிஷ்டசாலியாவேன். மேலும் புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் மற்றும் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும், அவர்களது உயர்ந்த ஆதரவினை நல்கியதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2014 இல் எமது இலக்கினை அடைவதற்கான முயற்சிகளுக்கு தமது வியக்கத்தக்க பங்களிப்பினை வழங்கி ஒத்துழைத்த சகல முகாமை மட்ட மற்றும் ஏனைய திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கும் பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எனது நன்றியினைத் தெரிவிப்பதற்கு இவர்கள் தகுதியுள்ளவர்கள் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

**சாந்தி நாவுக்கரசன்**
**பணிப்பாளர்**

# இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்

**அறிமுகம்**

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், இந்து சமயத்தை மேம்படுத்துதல், பெருக்குதல், பேணிப்பாதுகாத்தல் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு 1986 ஜனவரி 01 ஆம் திகதியன்று ஸ்தாபிக்கப்பட்டது.

**தொலை நோக்கு**

இந்துசமயத்தையும் பண்பாட்டையும் பேணிப் பாதுகாத்தலும், மேம்படுத்திப் பரப்புதலும்

**செயற்பணி**

இந்துசமயம், இந்துசமயக் கல்வி, இந்து கலாசாரம், கலைகள் ஆகியவற்றின் பேணுகை, ஊக்குவிப்பு, பெருக்குதல் மற்றும் கோவில்களின் புனரமைப்பு.

**குறிக்கோள்கள்**

- ஒழுக்க விழுமியங்களையும், சமயப் பெறுமானங்களையும் இந்துச் சிறார்களுக்கிடையே ஊக்குவிப்பதற்காக இந்துசமயக் கல்வியை ஊக்குவித்தல்
- இந்துசமயத்தையும் கலாசாரத்தையும் அபிவிருத்தி செய்து பேணுவதற்காக இந்துசமய ஆசாரங்களைப் பேணுதல்
- இந்துசமய கலாசார ஆராய்ச்சியை அபிவிருத்தி செய்தல்
- இந்துசமய, கலை மற்றும் கட்டிடக்கலை தொடர்பான உயர்ந்த எண்ணத்தினை பொதுமக்களிடையே பரப்புதல்

**பிரதான செயற்பாடுகள்**

- இந்து ஆலயங்கள் புனரமைப்பு
- இந்துக் குருமார்களுக்கான பயிற்சி
- நாயன்மார்களின் குருப‘ஜைகளை அனுஷ்டித்தல் மற்றும் இந்து சமயச் சொற்பொழிவுகள் மற்றும் பாரம்பரிய மரபுகளைப் பேணிக்காத்தல்
- இந்து அறநெறிப் பாடசாலைகளில் இந்துசமயக் கல்வியை மேம்படுத்தலும் சமய விழுமியங்களைப் பேணுவதற்கு ஊக்கமளித்தலும்
- இந்துக் கலைக் களஞ்சியங்களின் தொகுப்பு
- இந்து ஆராய்ச்சி நூலகத்தின் நிர்வாகம்
- இந்துசமய, தமிழ்க் கலாசார ஆய்வுகளை மேற்கொள்ளல்
- இந்துசமய தமிழ்க் கலைகளைப்பேணுதல்
- கதிர்காமம் இந்து யாத்திரிகர் விடுதியின் முகாமைத்துவம்
- மட்டக்களப்பு இந்து கலாசார நிலையத்தின் முகாமைத்துவம்
- யாழ்ப்பாணம், ஆணைப்பந்தி குருகுல கட்டட முகாமைத்துவம்
- யாழ்ப்பாணம், நல்லூர் நாவலர் மணிமண்டபத்தின் முகாமைத்துவம்
- இந்து கலை கலாசாரத்தை பேணிப் பாதுகாத்தல்
- இந்துப்பண்பாட்டு நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளை அமுலாக்கம் செய்தல்

# நிகழ்ச்சிகள் மற்றும் செயலாற்றுகை பற்றிய அறிக்கை

**01.01.2014 – 31.12.2014 வரை**

**அறிமுகம்**

ஒழுக்க விழுமியங்கள் நிறைந்த சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்காக, அரசாங்கக் கொள்கைகளுக்கிணங்க இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

**நிகழ்ச்சித் திட்டங்கள்**

I. இந்துஅறநெறிப் பாடசாலைகளின் அபிவிருத்தி
II. இந்துசமய மேம்பாடு
III. இந்துசமய கலாசார ஆராய்ச்சி
IV. இந்துசமய, தமிழ்க்கலை கலாசார மேம்பாடு
V. இந்து ஆலயங்கள் மற்றும் நிறுவனங்களின் அபிவிருத்தி

2014 ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் திணைக்களத்தின் மூலம் பின்வரும் செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

## *I. இந்து அறநெறிப் பாடசாலைகளின் அபிவிருத்தி*

இளம் இந்துச்சிறார் மனதில், ஒழுக்க விழுமியங்கள்,மற்றும் நற்பண்புகளை வளர்த்தல், கடவுள் நம்பிக்கையுடன் பிரார்த்தனைகளை மேற்கொள்ள வழிகாட்டல், சமய அறிவை வளர்த்துக் கொள்வதற்கான போதனை என்பவற்றை அடிப்படை நோக்கங்களாகக் கொண்டு இந்து அறநெறிப் பாடசாலைகள் இயங்குகின்றன. இவற்றை அபிவிருத்தி செய்வதற்காக பல்வேறு செயற்திட்டங்கள் வடிவமைக்கப்பட்டு திணைக்களத்தின் மூலம் செயற்படுத்தப்படுகின்றன. ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகளை நடத்துதல், அறநெறிப் பாடசாலைகளுக்கான நூல் விநியோகம். மாணவர்களுக்குரிய சீருடைகளை வழங்குதல், அறநெறிப் பாடசாலைகளின் அடிப்படைத் தளபாடத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள நிதியுதவி வழங்குதல் போன்றன பிரதான செயற்பாடுகளாகும்.

### 01. அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகளும், பயிற்சிப் பட்டறைகளும்

அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் போதனை முறையை நெறிப்படுத்துவதற்காகவும், பாடத்திட்டத்தின் அடிப்படையைத் தெளிவுபடுத்துவதற்காகவும், மாணவர்களுக்கான செயல்முறைக் கற்பித்தலை மேற்கொள்வதற்காகவும் மாவட்டங்கள் தோறும் பயிற்சிக் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன.

2014 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை திணக்களத்தில்லூ

- பதிவு செய்யப்பட்டுள்ள அறநெறிப்பாடசாலைகளின் எண்ணிக்கை - 1,887
- அறநெறிப் பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை - 285,067
- அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் எண்ணிக்கை - 9,407

| இல | நிகழ்ச்சியின் பெயர் | மாவட்டம் | பயனடைந்தோர் |
|---|---|---|---|
| 01. | தர்மாசாரியர் வதிவிடக் கருத்தரங்குகள் 07 நடைபெற்றுள்ளன | கொழும்பு, கம்பஹா, காலி, கேகாலை, மாத்தளை, களுத்துறை, புத்தளம், குருணாகல், கண்டி, இரத்தினபுரி, நுவரெலியா, மாத்தறை, பதுளை, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, பொலநறுவை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா. | 707 இந்து தர்மாசிரியர்கள் பயன்பெற்றனர். |
| 02. | அறநெறி ஆசிரியர்களுக்கான வதிவிடக் கற்பித்தல் முறைக் கருத்தரங்கு 03நடத்தப்பட்டுள்ளன | திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, பொலநறுவை, யாழ்ப்பாணம் | 682 இந்து அறநெறி ஆசிரியர்கள் பயன்பெற்றனர். |
| 03. | அறநெறி ஆசிரியர்களுக்கான 13 இறுதிநிலைப் பரீட்சைக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன | களுத்துறை, இரத்தினபுரி, பதுளை, கொழும்பு, கம்பஹா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, காலி,மன்னார், மட்டக்களப்பு புத்தளம்,அம்பாறை, யாழ்ப்பாணம்,கண்டி | 1196 இந்து அறநெறி ஆசிரியர்கள் பங்குபற்றி பயன் பெற்றனர் |





தர்மாசாரியர் வதிவிடக் கருத்தரங்கு, கொழும்பு






தர்மாசாரியர் வதிவிடக் கருத்தரங்கு, மட்டக்களப்பு

## 02. அறநெறிப் பாடசாலைப் மாணவர்களுக்கான பொது அறிவுப் போட்டிப் பரீட்சை

அகில இலங்கை ரீதியில் நடத்தப்படும் இந்து சமய பொது அறிவுப் போட்டிப் பரீட்சை 2006 ஆம் ஆண்டிலிருந்து இத் திணைக்களத்தினால் நாடளாவிய ரீதியில் வருடாந்தம் தரம் 2 இலிருந்து தரம் 11 வரையான மாணவர்களின் சமய அறிவை மேம்படுத்தல், மதிப்பிடுதல், ஆளுமை விருத்தி என்பவற்றை இலக்காகக் கொண்டு பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் நடத்தப்பட்டு பரீட்சையில் தேசிய மட்டம், மாவட்ட மட்டங்களில் உயர் புள்ளிகள் பெற்று வெற்றியடைந்த மாணவர்களுக்கு பணப் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்படுகின்றது.

2014, ஜவூன் 28 ஆம் திகதி 160 பரீட்சை நிலையங்களில் அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற பொது அறிவுப் போட்டிப் பரீட்சையில் 69,783 மாணவர்கள் தோற்றியுள்ளனர். இப் பரீட்சையில் உயர் புள்ளிகள் பெற்று வெற்றியடைந்த மாணவர்களுக்குகான பரிசளிப்பு விழா 2014 ஒக்டோபர் மாதம் 18 ஆம் திகதி பம்பலப்பிட்டி புதிய கதிரேஷன் மண்டபத்தில் நடைபெற்றது. இவ் விழாவில் தேசிய மட்டத்தில் முதலாம் நிலையில் 31 மாணவர்களுக்கும் இரண்டாம் நிலையில் 07 மாணவர்களுக்கும், மூன்றாம் நிலையில் 08 மாணவர்களுக்கும் முறையே 5000 ரூபா, 4000 ரூபா, 3000 ரூபா பணப்பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. மாவட்ட மட்டங்களில் முதலாம் நிலையில் 161 மாணவர்களுக்கும், இரண்டாம் நிலையில் 144 மாணவர்களுக்கும், மூன்றாம் நிலையில் 129 மாணவர்களுக்கும் முறையே 3000 ரூபா, 2000 ரூபா, 1000 ரூபா பணப்பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இத்துடன் இந்துசமய பொது அறிவுப் பரீட்சை பரிசளிப்பு விழா சிறப்பு மலரும் வெளியிடப்பட்டது. இவ் வைபவத்தில் அறநெறி பாடசாலைகளைச் சேர்ந்த 1000 மாணவர்கள், அவர்களின் பெற்றோரகள், மற்றும் அறநெறி பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்களும் பங்குபற்றினர்.



## 03. இந்து அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான நூலகக்கொடுப்பனவு

அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், தமது சமய அறிவை விருத்தி செய்து கொள்வதற்காக நூல்களைக் கொள்வனவு செய்வதற்கென வருடத்திற்கு ஒரு தடவை நூலகக் கொடுப்பனவாக தலாரூ. 2000/= வீதம் வழங்கப்படுகின்றது. இதற்கமைவாக யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கண்டி, நுவரெலியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, அம்பாறை, கேகாலை, மாத்தளை, பதுளை, புத்தளம், திருகோணமலை, இரத்தினபுரி, களுத்துறை, பொலநறுவை, கொழும்பு, குருநாகல், காலி, மாத்தறை, கம்பஹா, மன்னார், வவுனியா ஆகிய 22 மாவட்டங்களிலுள்ள 773 அறநெறிப் பாடசாலைகளின் 3250 ஆசிரியர்களுக்கு இக் கொடுப்பனவு இவ்வாண்டில் வழங்கப்பட்டுள்ளது.

## 04. இசைக்கருவி கொள்வனவும் விநியோகமும்

இந்த ஆண்டுஅறநெறிப் பாடசாலைகளுக்கு வழங்குவதற்கென கொள்வனவு செய்யப்பட்ட 81 சுருதிப்பெட்டிகள் மற்றும் 80 தாளங்களில், இவ்வாண்டில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, நுவரெலியா, கிளிநொச்சி,, இரத்தினபுரி, களுத்துறை, காலி, ஆகிய 07 மாவட்டங்களிலுள்ள 79 அறநெறிப் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

## 05. அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கு சீருடைக் கொள்வனவு

திணைக்களத்தின் மூலம் அறநெறிப் பாடசாலை மாணவ மாணவியர்களுக்கு வருடந்தோறும் இலவசமாக சீருடைத் துணிகள் வழங்கப்படுகின்றன.இதற்கமைவாக மூன்று கட்டமாக 65,050 மீற்றர் சீருடைத்துணி கொள்வனவு செய்யப்பட்டு இதில் கண்டி, மாத்தளை, நுவரெலியா, மட்டக்களப்பு, களுத்துறை, யாழ்ப்பாணம்,மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு பதுளை, கொழும்பு, காலி, இரத்தினபுரி ஆகிய 13 மாவட்டங்களிலுள்ள 311 அறநெறிப் பாடசாலைகளின் 10,968 ஆண்பிள்ளைகளுக்கும், 11,889 பெண்பிள்ளைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம் மொத்தமாக 22,857 இந்து அறநெறி பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.





## 06. பண்ணிசை வகுப்புகள்

அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பண்ணிசை ஆற்றலை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டிலும் மாவட்ட மட்டங்களில் பண்ணிசை வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. இவ்வாண்டில் 437 பண்ணிசை வகுப்புக்கள் களுத்துறை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, பதுளை, ஆகிய மாவட்டங்களில் நடைபெற்றுள்ளன.

களுத்துறை மாவட்ட அறநெறி பாடசாலை மாணவர்களுக்கான பண்ணிசைக் கருத்தரங்கு 20.12.2014 புளத்சிங்கள வில் நடைபெற்றதுடன் பதுளை, மட்டக்களப்பு அறநெறி பாடசாலை மாணவர்களுக்கான பண்ணிசைக் கருத்தரங்கு 20.12.2014 லுணுகலையில் நடைபெற்றது. இக் கருத்தரங்குகளில் மொத்தமாக 200 மாணவர்கள் பங்குபற்றி பயன் பெற்றனர்.





பண்ணிசைக் கருத்தரங்கு, களுத்துறை

## 07. அறநெறிப்பாடசாலை அபிவிருத்திக்கான மூலதனக் கொடுப்பனவு

அறநெறிப்பாடசாலைகளின் தளபாடத் தேவையைப் பு'ர்த்தி செய்யும் நோக்குடன், வருடந்தோறும் தளபாடக் கொள்வனவிற்காக தலா 30,000 ரூபாவினை வழங்கப்படுகின்றது. அதனடிப்படையில் கண்டி, கேகாலை, கொழும்பு, இரத்தினபுரி, கிளிநொச்சி, மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், வவுனியா, புத்தளம், களுத்துறை, முல்லைத்தீவு, பதுளை, நுவரெலியா, மாத்தளை, குருநாகல், காலி, பொலநறுவை ஆகிய 18 மாவட்டங்களைச் சேர்ந்த 67 அறநெறிப் பாடசாலைகளுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது.

## 08. அறநெறிப் பாடசாலை மாணவர்களின் துணை நூற் பயன்பாட்டிற்கெனப் பின்வரும் இந்து சமய நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

- ❖ இந்து மக்களுக்கு ஒரு கையேடு - 1,000 பிரதிகள்
- ❖ அறநெறி அமுதம் - 4,000 பிரதிகள்
- ❖ இந்து நாகரீகம் - 500 பிரதிகள்
- ❖ நற்சிந்தனைகள் - 250 பிரதிகள்
- ❖ ஆளுமை வளர்ச்சி - 60 பிரதிகள்
- ❖ நித்திய வழிபாட்டுத் தோத்திரம் - 500 பிரதிகள்
- ❖ சிறுவர்களுக்கான சைவ சமயக் கதைகள் - 200 பிரதிகள்
- ❖ சிறுவர்களுக்கு சுவாமி விபுலானந்தர் - 200 பிரதிகள்
- ❖ அருள்வாக்குகள் - 250 பிரதிகள்
- ❖ மண்ணில் நல்ல வண்ணம் அமுதமொழி - 250 பிரதிகள்
- ❖ இராமகிருஷ்ணரின் நீதிக்கதைகள் - 25 பிரதிகள்
- ❖ விபுலானந்தர் சொன்ன கதை - 36 பிரதிகள்
- ❖ இறையருள் அமுதம் - 200 பிரதிகள்
- ❖ இளைஞர்களின் சிந்தனைக்கு - 260 பிரதிகள்
- ❖ வீர இளைஞர்களுக்கு - 130 பிரதிகள்
- ❖ சித்திர இராமாயணம் - 109 பிரதிகள்
- ❖ விவேகக் கதைகள் - 120 பிரதிதகள்
- ❖ மகாபாரதம் - 100 பிரதிகள்

கொள்வனவு செய்யப்பட் நூல்கள் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

## 09. அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான நூல்கள், பதிவேடுகள் அச்சிடல்/வழங்கல்

அறநெறிப் பாடசாலை, ஆசிரியர்கள் மாணவர்களுக்கு உதவும் வகையில் கீழ்வரும் நூல்கள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன.

**அச்சிடப்பட்ட நூல்கள்**

- ❖ இறுதிநிலை பரீட்சைக்கான கடந்த கால வினாப்பத்திரங்கள் - 3000 பிரதிகள்
- ❖ சைவபோதினி கீழ்ப்பிவு - 6000 பிரதிகள்
- ❖ சைவபோதினி பாலர் பிரிவு - 6000 பிரதிகள்
- ❖ சைவபோதினி நடுப்பிரிவு - 5000 பிரதிகள்
- ❖ சைவசமயம் ˙3000 பிரதிகள்
- ❖ இந்து தர்மாசிரியர் வினாவிடை - 2000 பிரதிகள்
- ❖ ஔவையார் அறிவுச்செல்வம் - 4,990 பிரதிகள்
- ❖ ஆசிரியர்கையேடு - 6,000 பிரதிகள்
- ❖ வரவுப்பதிவேடு -20000 பிரதிகள்
- ❖ பரிசளிப்புவிழா சிறப்புமலர் - 1000 பிரதிகள்
- ❖ பாடத்திட்டம் - 5000 பிரதிகள்

**அச்சிடப்பட்ட நூல்கள் 460 அறநெறிப் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.**

- ❖ சைவபோதினி கீழ்ப்பிவு - 5399 பிரதிகள்
- ❖ சைவபோதினி பாலர் பிரிவு - 6000 பிரதிகள்
- ❖ சைவபோதினி நடுப்பிரிவு - 5000 பிரதிகள்
- ❖ சைவபோதினி மேற்பிரிவு - 3000 பிரதிகள்
- ❖ இந்து தர்மாசிரியர் வினாவிடை - 149 பிரதிகள்
- ❖ ஔவையார் அறிவுச்செல்வம் - 3838 பிரதிகள்
- ❖ ஆசிரியர்கையேடு - 3944 பிரதிகள்
- ❖ வரவுப்பதிவேடு - 4076 பிரதிகள்
- ❖ பாடத்திட்டம் - 2898 பிரதிகள்



அறநெறிப் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்ட நூல்கள்

## 10. இந்து இளைஞர்களுக்கான ஆன்மீக தலைமைத்துவப் பயிற்சி

இந்து இளைஞர்களின் ஆன்மீக மற்றும் ஆளுமைப் பண்புகளையும் தலைமைத்துவத்தையும் வளர்க்கும் நோக்குடன் வருடந்தோறும் நடத்தப்படும் இப்பயிற்சி இவ்வாண்டு ஏப்ரல் மாதம் 19, 20 ஆம் திகதிகளில் பதுளை, நுவரெலியா மாவட்ட இந்து அறநெறிப் பாடசாலை இளைஞர்களுக்கு பதுளையிலும் செப்டம்பர் மாதம் 5, 6 ஆம் திகதிகளில் கிளிநொச்சி மாவட்ட இந்து அறநெறிப் பாடசாலை இளைஞர்களுக்கு கிளிநொச்சி இந்துக் கல்லூரியிலும், ஒக்டோபர் மாதம் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட இந்து அறநெறிப் பாடசாலை இளைஞர்களுக்கு மாங்குளம் சிவசற்குணநாதர் ஆச்சிரமத்திலும் மற்றும் 22, 23 டிசம்பர் மாதம் கோகாலை மாவட்ட இந்து அறநெறிப் பாடசாலை இளைஞர்களுக்கு கொழும்பு இராமகிருஷ்ணமிசன் மண்டபத்திலும் நடத்தப்பட்டுள்ளன. இப்பயிற்சி நெறியில் மொத்தமாக 527 இந்து இளைஞர்கள் பங்கு கொண்டு பயன் பெற்றனர்.





கோகாலை மாவட்ட இந்து அறநெறிப் பாடசாலை இளைஞர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெற்ற போது

## 11. "தேசத்திற்கு மகுடம்" திட்டத்தின் கீழ் அறநெறிப் பாடசாலைகளுக்கான கட்டட நிதியுதவி

கேகாலை, புத்தளம், குருணாகலை ஆகிய மாவட்டங்களில் 05 அறநெறிப் பாடசாலை கட்டட நிர்மாணத்திற்காக புத்தளத்தில் 03 பாடசாலைகளுக்கும், கேகாலையில் 01 பாடசாலைக்கும் மற்றும் குருணாகலில் 01 பாடசாலைக்குமாக மொத்தம் 05 பாடசாலைகளுக்கு தலா 2 லட்சம் ரூபா வீதம் ஒரு மில்லியன் ரூபா உரிய மாவட்ட செயலாளர்களினூடாக ஒதுக்கப்பட்டு செலவு செய்யப்பட்டுள்ளது.

## *II. இந்துசமய மேம்பாடு*

இந்துசமயப் பண்பாடு மற்றும் சமய விழாக்களை ஊக்குவிக்கும் நோக்குடன், திணைக்களம் பல்வேறு மாவட்டங்களிலும் விழாக்களை ஒழுங்கு செய்வதோடு, அனுசரணையையும் வழங்குகின்றது.

### 12. இந்துசமய விரிவுரைகள்

ஆலயங்கள் மற்றும் இந்துசமய நிறுவனங்களில் சமயச் சொற்பொழிவாளர்கள் மூலம் இந்து சமயச் சொற்பொழிவுகள் மற்றும் விரிவுரைகள் நடத்தப்படுகின்றன. இதுவரை யாழ்ப்பாணம், புத்தளம், மட்டக்களப்பு, இரத்தினபுரி, மாத்தளை, கண்டி, அம்பாறை, பதுளை, கொழும்பு, நுவரெலியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, களுத்துறை, காலி ஆகிய 14 மாவட்டங்களில் 121 சமய விரிவுரைகள் நடாத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் 7500 ற்கும் மேற்பட்ட இந்துப் பொது மக்கள் பயன்பெற்றுள்ளனர்.





### 13. குருபூஜைகள்

இந்து சமய நாயன்மாரின் குருப'ஜைத் தினங்களை அனுஷ்டிக்கும் முகமாக ஆலயங்களில் விசேட நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. இவ்வாண்டு யாழ்ப்பாணம்,காலி, இரத்தினபுரி, கொழும்பு, பதுளை, நுவரெலியா, முல்லைத்தீவு,கண்டி, திருகோணமலை, மன்னார், அம்பாறை, மட்டக்களப்பு, மாத்தளை, கம்பஹா, புத்தளம், பொலநறுவை ஆகிய 16 மாவட்டங்களில்90 நாயன்மார் குருப'ஜைகள் இடம்பெற்றுள்ளன. பிரதேச செயலகங்களில் இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உதவியாளர்களின் உதவியுடனும், சமய நிறுவனங்களின் அனுசரணையுடனும் இவை ஏற்பாடு செய்யப்பட்டன. இதன் மூலம் 7200 ற்கும் மேற்பட்ட இந்துப் பொது மக்கள் பயன்பெற்றுள்ளனர்.







## 14. இந்து சமய விழாக்கள்

**தைப்பொங்கல்- முத்திரை வெளியீடு**

2014.01.14 யாழ் துர்க்கா மணி மண்டபத்தில் தபால் திணைக்களத்தின் அனுசரணையுடன் கௌரவ பிரதமர் அவர்களினால் தைப்பொங்கல் விஷேட முத்திரை வெளியீடு நடைபெற்றது.






**தைப்பொங்கல் விழா**

2014.01.14 அன்று யாழ் நாவலர் மணி மண்டபம், வவுனியா, கிளிநொச்சி, களுத்துறை, கொழும்பு, நுவரெலியா, புத்தளம், திருகோணமலை, மட்டக்களப்பு, ஆகிய மாவட்டங்களில் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பொங்கல் விழா நடைபெற்றது

**மகா சிவராத்திரி விழா**

திணைக்களத்தின் அனுசரணையுடன் இவ்வாண்டு மார்ச் 20ஆம் திகதி மஹா சிவராத்திரி விரதத்தை முன்னிட்டு விசேட ப‘ஜைகள் மற்றும் ஆன்மீக கலைநிகழ்ச்சிகள் இரத்தினபுரி சிவன் ஆலயத்தில் நடைபெற்றன. இவ் விழாவில் புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சின் பிரதி அமைச்சர் கௌரவ எம்.கே.ஏ.டி.எஸ் குணவர்தன அவர்கள், இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட செயலாளர், திணைக்கள பணிப்பாளர் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

மேலும் சிவராத்திரியை முன்னிட்டுகாலி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், புத்தளம், பதுளை, திருகோணமலை, மட்டக்களப்பு, கிளிநொச்சி, பொலநறுவை ஆகிய மாவட்டங்களின் ஆலயங்களில்விசேட பு‘ஜைகளும், கலை நிகழ்வுகளும் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடாத்தப்பட்டன.







இரத்தினபுரி சிவன் ஆலயமத்தில் நடைபெற்ற சிவராத்திரி விழா

**நவராத்திரி விழா**

திணைக்களத்தின் அனுசரணையுடன் செப்டெம்பர் மாதம் 24 திகதி தொடக்கம் ஒக்டோபர் மாதம் 03 ம் திகதி வரை யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கண்டி, நுவரெலியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, அம்பாறை, மாத்தளை, பதுளை, புத்தளம், திருகோணமலை, மாத்தறை, இரத்தினபுரி, களுத்துறை, பொலநறுவை, கொழும்பு, காலி, கம்பஹா, வவுனியா19 மாவட்ட மட்டங்களில் 50 நவராத்திரி விழா வைபவமும் இடம்பெற்றது 25.09.2014 அன்று பாராளுமன்றத்தில் நடைபெற்ற விழாவில் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சின் செயலாளர், திணைக்களப் பணிப்பாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களும் பங்குபற்றினர். இதில் யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.





நவராத்திரி விழா, காரைநகர் சிவகாமி அம்மன் ஆலயம்



நவராத்திரி விழா, குருகுலம் யாழ்ப்பாணம்

## 15. புண்ணிய கிராம நிகழ்ச்சித் திட்டம்

தெரிவு செய்யப்பட்ட, மிகவும் பின்தங்கிய பிரதேசங்களில் பொது மக்களை ஒன்று கூட்டி இந்துமத ஒழுக்கப் பண்புகளைப் போதிக்கும் வகையிலான இத்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மட்டக்களப்பு, காலி, பதுளை, வவுனியா, இரத்தினபுரி, முதலான 09 மாவட்டங்களில் 14 புண்ணிய கிராம நிகழ்வுகள் நடாத்தப்பட்டுள்ளன. 2050 ற்கும் மேற்பட்ட பொது மக்கள், மற்றும் பள்ளி மாணவர்கள் இவற்றில் பங்குகொண்டு பயன் பெற்றனர்.





## 16. நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் இடம்பெறும் வகுப்புக்கள்

திணைக்கள நிர்வாகத்திலுள்ள யாழ்ப்பாணம் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் உடல், உள, ஆரோக்கியத்தினையும் கலாசார வளர்ச்சியினையும் நோக்காகக் கொண்டு 174 யோகாசன வகுப்புகளும் 64 மிருதங்கம் வகுப்புகளும், 75 வயலின் வகுப்புக்களும் 102 பண்ணிசை வகுப்புக்களும் மற்றும் 03 நாயன்மார்களின் குருபு‘சைகள், நவராத்திரிவிழா மற்றும் திருவாசகவிழா ஆகியனவும் நடத்தப்பட்டுள்ளன.





## 17. இந்து கலாசார நிலையம் நாவற்குடா, மட்டக்களப்பு

திணைக்கள நிர்வாகத்திலுள்ள மட்டக்களப்பு நாவற்குடா இந்து கலாசார நிலையத்தில் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் உடல் உள ஆரோக்கியம் மற்றும் கலை ஆர்வத்தினை மேம்பாடடைவதை நோக்காகக் கொண்டு 54 யோகாசனம் வகுப்புக்களும்,430 நடன வகுப்புக்களும்மற்றும் நவராத்திரிவிழா ஆகியனநடத்தப்பட்டுள்ளன.



## 18. தேசத்திற்கு மகுடம் – கண்காட்சி

2014 ஆம் ஆண்டு ஜனவரி 21 ம் திகதியிலிருந்து 2014 பெப்ரவரி02 ஆம் திகதி வரை “தேசத்திற்கு மகுடம்’’ எனும் கருப்பொருளிலான கண்காட்சியொன்று குருணாகல் வயம்ப பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. இக்கண்காட்சியில் இலங்கையின் அனைத்து அமைச்சுக்களும் திணைக்களங்களும் பங்குபற்றி காட்சிக்கூடங்களை அமைத்திருந்தன. இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த காட்சிக் கூடத்தில் திணைக்களத்தால் நடாத்தப்படும், செயற்திட்டங்கள், நிகழ்வுகள் தொடர்பான விபரங்கள் மற்றும் புகைப்படங்கள் என்பன விளக்கங்களுடன் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. மேலும், திணைக்கள வெளியீட்டு நூல்கள் மற்றும் இந்துப் பாரம்பரியத்தை உணர்த்தும் வகையிலான காட்சிப் பொருட்கள் போன்றவையும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.





## 19. ஏனைய விழாக்கள்

இலங்கையின் 66 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு 04.02.2014 ஆம் திகதி இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கேகாலை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் விசேட ப‘ஜைகள் இடம்பெற்றன. இப் ப‘ஜையில் சப்ரகமுவ மாகாண சபை உறுப்பினர்கள், கோகாலை மாவட்ட செயலாளர், அமைச்சின் மேலதிகச் செயலாளர், இத் திணைக்களத்தின் பணிப்பாளர், உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்களும் கலந்து சிறப்பித்தார்கள்.







சுதந்திரதின விஷேட பு‘ஜை, கேகாலை

அத்துடன் பொலநறுவை, பதுளை மாவட்டங்களில் நடைபெற்ற தமிழ் இலக்கிய கலாசார விழாவில் 365 ற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.





## 20. இந்துக் குருமார்கள் மற்றும் அறநெறி ஆசிரியர்களுக்கான பிற மொழிப்புலமை

இந்துக் குருமார்கள் மற்றும் அறநெறி ஆசிரியர்களுக்கு பிற மொழிகளிலும் புலமையினை மேம்படுத்தும் நோக்கில் இப் பயிற்சி நெறியானது மட்டக்களப்பு மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களில் ஆகஸ்டு மாதம் 2014 இல் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதனடிப்படையில் இப் பயிற்சிநெறி யாழ்ப்பாணத்தில் 24 சிங்கள வகுப்புகளும் மற்றம் 24 ஆங்கில வகுப்புகளும் அதேபோன்று மட்டக்களப்பில் 41 சிங்கள வகுப்புகளும் நடைபெறறுள்ளன.

## 21. “இனிய வசந்தம்” இந்து பௌத்த ஒருங்கிணைப்பு நிகழ்ச்சி (அமைச்சினூடான ஒதுக்கீட்டிலிருந்து)

புத்தசாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சின் வழிகாட்டலுடன் பௌத்த மத அலுவல்கள் திணைக்களமும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து இந்து பௌத்த ஒருங்கிணைப்பு நிகழ்ச்சியினை நடாத்தி வருகின்றன.

இந் நிகழ்வானது இந்து பௌத்த மக்களிடையே ஒற்றுமையையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்தும் நோக்குடன் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இந் நிகழ்வில் இந்து பௌத்த மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மத குருமார்களை ஓர் இடத்தில் ஒன்று கூடச்செய்வதோடு, பரஸ்பரம் கருத்துப் பரிமாற்றங்களைச் செய்வதுடன், இரு இனங்களுக்கிடையிலான கலை, கலாசார,பாரம்பரிய விழுமியங்களைத் தெரிந்து கொள்வதற்கு வழி வகுக்கும் ஒரு நிகழ்ச்சித் திட்டமாக அமைகின்றது.

2014 இல் 08 நிகழ்ச்சிகள் இடம்பெற்றுள்ளன. அவையாவன:

01. 03.05.2014 முதல் 04.05.2014 வரை மட்டக்களப்பு, கல்லடியிலுள்ள இந்து கலாசார நிலையத்தில் நடை பெற்றது.
02. 31.05.2014 முதல் 01.05.2014 வரை பொலநறுவையிலுள்ள வெலிகந்த, அசேலபுர, மைத்திரிகம, ஸ்ரீ சுதர்ஷணாராம விஹாரையில் நடைபெற்றது.
03. 20.06.2014 முதல் 22.06.2014 வரை யாழ்ப்பாணம் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெற்றது.
04. 26.07.2014 முதல் 27.07.2014 வரை புத்தளம், மகவ, இகல ஸ்ரீ சுதர்ஷணாராம விஹாரையில் நடைபெற்றது
05. 23.08.2014 முதல் 24.08.2014 வரை வவுனியா போதிதக்ஷினாராம விஹாரையில் நடைபெற்றது.
06. 13.09.2014 முதல் 14.09..2014 வரை மன்னார் திருக்கேதீச்சரத்தில் நடைபெற்றது
07. 04.10.2014 முதல் 05.10.2014 வரை கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமத்தில் நடைபெற்றது.
08. 08.11.2014 முதல் 09.11.2014 வரை குருநாகல் கொக்கரல்ல உதுறுபவ் விகாரையில் நடைபெற்றது.

மட்டக்களப்பில் நடைப்பெற்ற நிகழ்வில் சித்திவிநாயகர் அறநெறிப் பாடசாலை, ஸ்ரீ வீரையடி விநாயகர் அறநெறிப் பாடசாலை, சிவசக்தி அறநெறிப் பாடசாலை, ஸ்ரீ நாலிங்க வைரவர் அறநெறிப் பாடசாலை, ஸ்ரீ முத்துமாரியம்மன் அறநெறிப் பாடசாலை, விவேகாநந்தா அறநெறிப் பாடசாலை, பாரதியார் அறநெறிப் பாடசாலைகளும் யாழ்ப்பாணத்தில் நடைப்பெற்ற நிகழ்வில் ஸ்ரீ பரராஜ பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, சிவகாமி அறநெறிப் பாடசாலை, ஸ்ரீ செல்வக்கதிர்காம முருகன் அறநெறிப் பாடசாலை, நெல்லண்டை அம்மன் அறநெறிப் பாடசாலை, சிவத்தமிழ் அறநெறிப் பாடசாலை, சிவன் அறநெறிப் பாடசாலைகளும், மன்னாரில் நடைப்பெற்ற நிகழ்வில் சுவாமி விவேகானந்தர் அறநெறிப் பாடசாலை, ஸ்ரீ முத்துமாரியம்மன் அறநெறிப் பாடசாலை, பு'ம்புகார் சித்திவிநாயகர் அறநெறிப் பாடசாலை, ஸ்ரீ முருகன் அறநெறிப் பாடசாலை, சித்திவிநாயகர் அறநெறிப் பாடசாலைகளும், கிளிநொச்சியில் நடைபெற்ற நிகழ்வில் ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, ஸ்ரீ முருகன் அறநெறிப்பாடசாலை, சிற்றூண்டி விநாயகர் அறநெறிப்பாடசாலை, அருள்மிகு கந்தசுவாமி அறநெறிப்பாடசாலை, சுவாமி விவேகானந்தர் அறநெறிப்பாடசாலை மற்றும் ஸ்ரீ நாகபு'சணி அம்மன் அறநெறிப் பாடசாலை ஆகியனவும் பங்குப்பற்றிக் கொண்டன.






இனியவசந்தம் நிகழ்ச்சி, மட்டக்களப்பு



இனியவசந்தம் நிகழ்ச்சி, குருநாகல்



இனியவசந்தம் நிகழ்ச்சி, பொலநறுவை

## III. *இந்து சமய கலாசார ஆராய்ச்சி*

### 22. இந்து சமய ஆராய்ச்சிக் கருத்தரங்கு

திணைக்களம் வருடம்தோறும் ஏற்பாடு செய்கின்ற இந்து சமயம் தொடர்பான ஆய்வரங்கின் ஓர் அம்சமாக இவ்வாண்டு " திருவாதவ'ரரும் சைவத்திருநெறியும்" எனும் தலைப்பிலான ஆய்வரங்கு கடந்த ஜவூலை மாதம் 18 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை பம்பலபிட்டி, சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.


திணைக்கள பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்ற ஆய்வரங்கு நிகழ்வில் பேராதனைப் பல்கலைக்கழகத் தகைசார் பேராசிரியரான திரு எஸ். பத்மநாதன் அவர்கள் அங்குரார்ப்பண வைபவத்திற்குத் தலைமை வகித்தார்.

இந் நிகழ்வில் மலேசிய திருமுருகன் திருவாக்குத் திருபீடத்தின் தலைவர் தவத்திரு பாலயோகி சுவாமிகள் பிரதம விருந்தினராகவும், புத்தசாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு எம்.கே.பீ. திசாநாயக அவர்கள் கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர்.

ஆய்வரங்கு அமர்வுகள், கலையரங்கு நிகழ்வுகள் என இரு அம்சங்களாக நடைபெற்றன. இம் மூன்று தினங்களிலும் 15 அமர்வுகளில் 45 கட்டுரைகள் ஆய்வுக்கட்டுரைகளாகச் சமர்பிக்கப்பட்டன. இதில் மலேசிய அறிஞர்களான பேராசிரியர் ஆர். சீதாலஷ்மி, மலாயா பல்கலைக்கழகம், கலாநிதி திலகவதி கனகரத்தினம், மலாயா பல்கலைக்கழகம், ஆகியோர் பங்குபற்றியதுடன் இந்திய அறிஞர்களான பேராசிரியர் பழமுத்து வீரப்பன், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், ஓய்வு பெற்ற பேராசிரியர் வெங்கட்ராமன், காமராஜர் பல்கலைக்கழகம், கலாநிதி வி. வேதாச்சலம், தொல்லியலாளர், இந்திய தொல்பொருளத் திணைக்களம் கலாநிதி ஏ. சதீஷ், உலக தமிழாராய்ச்சி நிறுவனம், தமிழ் நாடு, கலாநிதி எஸ் தசரதன், உலக தமிழாராய்ச்சி நிறுவனம் தமிழ்நாடு ஆகியோர் பங்குபற்றியதுடன் இந்தியப் பேச்சாளராக பேராசிரியர் கே. சிவகுமார் அவர்களும் பங்குப்பற்றியிருந்தார். அத்துடன் திருத்தணி சுவாமிநாதன் அவர்களின் பண்ணிசைக் கச்சேரியும், ஸ்ரீமதி விநோஸ்ரீ நல்லகண்ணு அவர்களின் நடனக்குழுவான மலேஷியா பத்மாலயா நடனக்குழுவினரின் நடன நிகழ்வும் இடம் பெற்றது.








இரண்டாம் நாள் மாலை நிகழ்வில் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் பிரதமரும், புத்தசாசன மற்றும் மத அலுவலகள் அமைச்சருமான கௌரவ டி.எம் ஜயரட்ன அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு ஆய்வு நூலினையும் ஒலிப்பேழையினையும் வெளியிட்டு வைத்தார். இம் மூன்று தினங்களிலும் பல்கலைக்கழக, பாடசாலை மாணவர்கள் மற்றும் இந்து சமய ஆர்வலர்கள் அடங்கலாக ஒவ்வொரு நாளும் தலா 200 பேர் வரையில் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.








**ஆய்வரங்கு கட்டுரைத்தொகுப்பு, சிறப்பு மலர், இந்துக் கலைக் களஞ்சியம் - 12 ம் தொகுதி மற்றும் திருவாசக பாடல்கள் அடங்கிய ஒலிப்பேழை வெளியீடு.**


முன்னைய ஆண்டு நடத்தப்பட்ட ஆய்வரங்கின் போது சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைத் தொகுப்பான “ மூவர் தமிழும் சைவ நெறியும்” எனும் நூலும் “ இந்துக் கலைக் களஞ்சியம் 12ம் தொகுதி நூலும் மற்றும் திருவாசகப் பாடல்கள் அடங்கிய ஒலிப்பேழையும் வெளியிடப்பட்டன.

“ மூவர் தமிழும் சைவ நெறியும்” எனும் நூலில் 750 பிரதிகள் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. இந் நூல் 40 ஆய்வுரைக் கட்டுரைகளுடன் 644 பக்கங்களைக் கொண்டு அமைந்துள்ளது.

ஆய்வரங்கின் தொடக்க வைபவத்தின் போது இவ்வாண்டின் தலைப்பினை ஒட்டியதாக “திருவாதவ‘ரரும் சைவத்திருநெறியும்” எனும் தலைப்பில் சிறப்பு மலர் 1000 பிரதிகள் அச்சிடப்பட்டு ஆய்வரங்கில் பங்கேற்றவர்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்பட்டது. இந் நூல் 10 ஆய்வுரைக் கட்டுரைகளுடன் 182 பக்கங்களைக் கொண்டு அமைந்துள்ளது.







**புதுவருட பஞ்சாங்கம்,கோபுரம், பண்பாடு தகவல் இதழ்கள் வெளியீடு.**


திணைக்களத் தகவல்களை உள்ளடக்கிய இதழான “கோபுரம்” முதலாவது, இரண்டாம் பதிப்பில் தலா3000 பிரதிகள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன அத்துடன் திணைக்கள ஆய்வு இதழான “பண்பாடு” இதழின் முதலாவது, இரண்டாம் பதிப்பில் தலா 1000 பிரதிகள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன.

“இந்துப் பஞ்சாங்கம்” 12,000 பிரதிகள் அச்சிடப்பட்டு பொதுமக்களுக்கும், ஆலயங்களுக்கும், இந்து நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டன. அத்துடன் பிள்ளையார் கதை 4000 பிரதிகள் அச்சிடப்பட்டு பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டதோடு வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு 15 வகையிலான நூல்கள் நாடு பூராகவுள்ள 150 பாடசாலை மற்றும் பொது நூலகங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.









## 23. சமஸ்கிருத மொழி வகுப்புக்கள்

மூன்று மாத கால சமஸ்கிருத மொழி வகுப்புக்கள் யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் ஆரம்பிக்கப்பட்டன. இதில் கொழும்பில் 25 மாணவர்களுடன் 28 வகுப்புக்களும் யாழ்ப்பாணத்தில் 12 மாணவர்களுடன் 29 வகுப்புக்களும் நடைபெற்றுள்ளன.

இதன் இறுதி நிகழ்வு, சான்றிதழ் வழங்கும் வைபவம் 21.06.2014 அன்று யாழ்ப்பாணம் குருகுலத்திலும் 29.06.2014 அன்று திணைக்கள கேட்போர் கூடத்திலும், திணைக்கள பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பயிற்சி பெற்ற மாணவர்கள் சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டனர்.






## 24. சைவசித்தாந்த வகுப்புக்கள்

சைவ சித்தாந்த ஆர்வலர்களுக்கென திணைக்களத்தினால் வகுப்புக்கள் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்டது.

இந்த ஆண்டு சைவசித்தாந்த வகுப்புக்கள் 2014 ஏப்ரல் 04ம், 05 ம் திகதிகளில் திருகோணமலை, உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் இடம்பெற்றது. இம்முறை பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க பாடசாலைகளில் இந்து சமயம், இந்து நாகரீகம் கற்கும் மாணவர்களுக்கு இவ் வகுப்புக்கள் நடைபெற்றன. இதில் 350 ற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.





## 25. ஆராய்ச்சிக்கூட்டங்களும் கலந்துரையாடல்களும்

இந்துக் கலைக்களஞ்சிய 12 ம் தொகுப்பு மற்றும் அரிய நூல் பதிப்பு தொடர்பாக ஆலோசனைக் குழு இதுவரையில் 08 கலந்துரையாடற் கூட்டங்களை நடத்தியுள்ளது.

## 26. சிற்பக்கலை மற்றும் கட்டடக்கலை தொடர்பான கருத்தரங்கு

ஆலயங்களின் கட்டட மற்றும் சிற்பக் கலை தொடர்பான வதிவிடக் கருத்தரங்கு யு‘லை 01,02 ஆம் திகதிகளில் வவுனியாவிலும், 03,04 ஆம் திகதிகளில் கிளிநொச்சியிலும் 05,06 ஆம் திகதிகளில் முல்லைத்தீவிலுமாக மூன்று கட்டங்களாக நடைபெற்றன. இதன்போது உயர்தர வகுப்பு மாணவர்கள், ஆசிரியர்கள் உட்பட வவுனியாவில் 250 பேரும், கிளிநொச்சியில் 175 பேரும், முல்லைத்தீவில் 175 பேரும் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

இதில் விரிவுரைகளை இலங்கை பேராதனைப் பல்லைலைக்கழகத்தின் தகைசார் பேராசிரியரான வரலாற்றுத்துறைப் பேராசிரியர் திரு. சி. பத்மநாதன் அவர்களும் மற்றும் இந்திய தமிழ்நாட்டு தொல்லியற்துறைப் பேராசிரியர் திரு. வேதாச்சலம் அவர்களும் நடாத்தியிருந்தனர்.







## 27. அரச பாடசாலைகளில் இந்து சமயம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு.

அரச பாடசாலைகளில் இந்துசமய பாடம் கற்பிக்கும் ஆசிரியருக்கான கருத்தரங்கு திணைக்கள கேட்போர் கூடத்தில் 15.09.2014 ஆம் திகதி தொடக்கம் 17.09.2014 ஆம் திகதி வரை நடைபெற்றது. இதில் இரத்தினபுரி, காலி, கேகாலை, மாத்தறை, கொழும்பு மற்றும் களுத்துறை மாவட்டங்களைச் சேர்ந்த 80 ஆசிரியர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

## 28. பிரசித்தி பெற்ற கோவில்களின் கையேடு மற்றும் இந்து ஆலயங்களுக்கான வழிகாட்டி நூல்

இலங்கையின் பிரசித்தி பெற்ற இந்துக் கோவில்களின் வரலாற்றுச் சிறப்புக்களையும் விளக்கும் ஓர் கையேட்டினை வெளிநாட்டு, உள்நாட்டு பக்தர்களின் நலன் கருதி வெளியிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதுவரையில் கையேட்டில் அடங்கும் ஆலயங்களில், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களின் ஆலயங்களும், மேலதிகமாக 76 ஆலயங்களும் தெரிவு செய்யப்பட்டு கட்டுரைகள் எழுதப்படுகின்றன. அத்துடன் யாழ்ப்பாணத்திலுள்ள பிரசித்தி பெற்ற 10 ஆலயங்களின் புகைப்படங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

## 29. ஈழத்துத் தமிழ்ச்சொல் அகராதி

இலங்கைத் தமிழ் மக்களின் வழக்கிலுள்ள தமிழ்ச் சொற்களை ஒன்று திரட்டி ஓர் அகராதியினை உருவாக்கும் நோக்கில் இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதனடிப்படையில், இதுவரையில் கணனியில் 1300 சொற்கள் பதிக்கப்பட்டு 1வது பிரதி அச்சுப்பதிப்பிற்கு வழங்கப்பட்டுள்ளது.

## III. *இந்துக் தமிழ்க்கலை கலாசார மேம்பாடு*

### 30. இலங்கை எழுத்தாளர்களிடமிருந்து நூல்கலைக் கொள்வனவு செய்தல்

இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் முகமாக இதுவரையில் 70 எழுத்தாளர்களிடமிருந்து மொத்தமாக 1825 நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டு பிரதான நூலகங்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

### 31. நாட்டுப்புறக்கலை மேம்பாடு

தமிழ்க் கலைகளை ஊக்குவிக்கும் செயற்றிட்டத்தின் கீழ் நாட்டுப்புறத்தமிழ்க் கலைகள் தொடர்பான பயிற்சிப்பட்டறை ஒக்டோபர் மாதம் 10, 11, 12 ஆம் திகதிகளில் மட்டக்களப்பு நாவற்குடா இந்துகலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இக் கருத்தரங்கில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அம்பாறை, மலையகம் ஆகிய இடங்களைச் சேர்ந்த 150 கலைஞர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.





### 32. கலாபூஷண விருது

கலை கலாசார ரீதியாக அளப்பரிய சேவைகள் ஆற்றிய கலைஞர்களுக்கு வருடம்தோரும் கலாசாரத் திணைக்களத்தின் மூலம் அரசின் உயர் விருதான கலாபு'ஷணம் விருது வழங்கப்பட்டு வருகின்றது. அதனடிப்படையில் இவ் விருதைப் பெறுவதற்கு தகுதியான 100 தமிழ்க் கலைஞர்கள் திணைக்களம் நியமித்த மதிப்பீட்டு குழு மூலம் தெரிவு செய்யப்பட்டனர். மார்கழி மாதம் 14 ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இவ் கலாப'ஷனம் விருது வழங்கும் வைபவத்தில் சிங்களக் கலைஞரகள் 278 பேருக்கும் தமிழ்க் கலைஞர்கள் 100 பேருக்கும் முஸ்லீம் கலைஞர்கள் 78 பேருக்குமாக மொத்தமாக 456 கலைஞர்கள் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், சுமார் 1000 கலை ஆர்வலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர்.








## IV. *இந்து ஆலயங்கள் மற்றும் நிறுவனங்களின் அபிவிருத்தி*

**மூலதன செலவினத்தின் கீழ் ஆலயங்களுக்கான நிதியுதவி**

### 33. இந்து ஆலயங்களுக்கான புனரமைப்பு (வடக்கு கிழக்கு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள இந்து ஆலயங்களின் புனரமைப்பிற்கென அவ் மாகாணங்களிலுள்ள 363 இந்து ஆலயங்களுக்கு பிரதேச செயலாளரினூடாக தலா ஒரு லட்சம் ரூபா வீதம் நிதியுதவிக் காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன.

| இல | மாவட்டம் | ஆலயங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | யாழ்ப்பாணம் | 118 |
| 02. | மட்டக்களப்பு | 125 |
| 03. | அம்பாறை | 21 |
| 04. | திருகோணமலை | 40 |
| 05. | வவுனியா | 38 |
| 06. | மன்னார் | 21 |
| **மொத்தம்** | | **363** |



ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயம், தெல்லிப்பளை



ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயம் தன்னாமுனை, மட்டக்களப்பு



ஸ்ரீமன் நாராயணன் ஆலயம், அம்பாறை



சித்தி விநாயகர் ஆலயம், பு‘நகரி

## 34. இந்து ஆலயங்கள், நிறுவனங்களின் புனரமைப்பு (வடக்கு, கிழக்கு தவிர்ந்த)

வடக்கு கிழக்கு தவிர்ந்த மாவட்டங்களிலுள்ளஇந்து ஆலயங்களின் புனரமைப்பிற்கென 146 இந்து ஆலயங்களுக்கு பிரதேசச் செயலாளர் ஊடாக தலா ஒரு லட்சம் ரூபா வீதம் காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் இவ் வருமானத் தலைப்பில் தேசத்திற்கு மகுடம் திட்டத்தின் கீழ் குருணாகல், புத்தளம், மாவட்டத்திலுள்ள ஆலயங்களின் புனரமைப்பிற்காக மாவட்ட செயலாளர் ஊடாக ஒதுக்கப்பட்டரூபா 5.40 மில் இல் 43 ஆலயங்களுக்கான செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| இல | மாவட்டம் | ஆலயங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | பதுளை | 19 |
| 02. | கொழும்பு | 10 |
| 03. | காலி | 13 |
| 04. | களுத்துறை | 08 |
| 05. | கண்டி | 19 |
| 06. | குருணாகல் | 02 |
| 07. | மாத்தளை | 04 |
| 08. | மாத்தறை | 04 |
| 09. | நுவரெலியா | 27 |
| 10. | இரத்தினபுரி | 40 |
| **மொத்தம்** | | **146** |
| **தேசத்திற்கு மகுடம் திட்டத்தின் கீழ்** | | |
| 11. | குருணாகல் | 19 |
| 12. | புத்தளம் | 24 |
| **மொத்தம்** | | **189** |



ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில்
றொக்கதன்ன எஸ்ரேட், ஆலி எல




ஸ்ரீ கற்பகப் பிள்ளையார் கோயில்
தெல்பெத்த குரூப், பதுளை



ஸ்ரீ சுப்பிரமணியர் சுவாமி கோயில்
ரெவன் சூட் டிவிசன், பள்ளகெட்டுவ, பதுளை

## 35. தேசத்திற்கு மகுடம் கண்காட்சியை முன்னிட்டு ஆலய புனரமைப்பிற்கான நிதியுதவி

இவ் ஆண்டுக்கான“தேசத்திற்கு மகுடம்” கண்காட்சியை முன்னிட்டு புத்தளம், கேகாலை மாவட்டங்களைச் சேர்ந்த 30 இந்து ஆலயங்களின் புனரமைப்பிற்கென மாவட்டச் செயலாளர் ஊடாக ஒதுக்கப்பட்டநிதியுதவியில் 28 ஆலயங்களுக்கான செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| இல | மாவட்டம் | ஆலயங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | கேகாலை | 25 |
| 02. | புத்தளம் | 03 |
| **மொத்தம்** | | **28** |

## 36. வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஆலய புனரமைப்பிற்கென நிதியுதவி

வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இந்து ஆலய புனரமைப்பிற்கென தலா ரூ 2 லட்சம் வீதம் பிரதேச செயலாளர் ஊடாக 100 ஆலயங்களுக்காக காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன.

| இல | மாவட்டம் | ஆலயங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | கிளிநொச்சி | 48 |
| 02. | முல்லைத்தீவு | 30 |
| 03. | மன்னார் | 20 |
| 04. | யாழ்ப்பாணம் | 01 |
| 05. | வவுனியா | 01 |
| **மொத்தம்** | | **100** |



சித்திரமேனி வைரவர் ஆலயம், யாழ்ப்பாணம்



செல்வ விநாயகர் ஆலயம், ஒலுமடு, மாங்குளம்



துர்க்கா பரமேஸ்வரி நயினை நாகம்மாள் ஆலயம்
திருமுறிகண்டி



ஸ்ரீ சப்த கன்னிமார் ஆலயம்,
வட்டுவாகல், முல்லைத்தீவு

## 37. இந்து ஆலயங்களுக்கான அடித்தள வசதி மேம்பாடு

நாட்டடிலுள்ள இந்து ஆலயங்களின் அடித்தள வசதிகளினை மேம்பாடடையச் செய்யும் நோக்கத்திற்கமைய 79இந்து ஆலயங்களுக்கு பிரதேச செயலாளர்களினூடாக காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன.

| இல | மாவட்டம் | ஆலயங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | கிளிநொச்சி | 19 |
| 02. | புத்தளம் | 01 |
| 03. | அம்பாறை | 11 |
| 04. | மட்டக்களப்பு | 06 |
| 05. | யாழ்ப்பாணம் | 15 |
| 06. | மன்னார் | 07 |
| 07. | திருகோணமலை | 08 |
| 08. | வவுனியா | 01 |
| 09. | மொனராகலை | 01 |
| 10. | பொலநறுவை | 05 |
| 11. | கண்டி | 02 |
| 12. | இரத்தினபுரி | 02 |
| 13. | கொழும்பு | 01 |
| **மொத்தம்** | | **79** |



ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலய தீர்த்தக் கிணறு, கிரான், மட்டக்களப்பு



ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத் தண்ணீர்த் தொட்டி, பரப்புக்கடந்தான், மன்னார்



ஈழத்து காசி ஷேத்திரத்தின் தண்ணீர்த் தாங்கி கிளிநொச்சி

**மீண்டு வரும் செலவினத்தின் கீழ் இந்து ஆலயங்களுக்கான நிதியுதவி**

**38.** இந்து ஆலயங்களின் கும்பாபிஷேக வைபவத்திற்கென நிதியுதவியளிக்கும் செயற்பாட்டின் கீழ் 22 இந்து ஆலயங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.இதன் விபரம் வருமாறு:

| இல | மாவட்டம் | ஆலயங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | யாழ்ப்பாணம் | 05 |
| 02. | பதுளை | 02 |
| 03. | நுவரெலியா | 04 |
| 04. | புத்தளம் | 02 |
| 05. | கேகாலை | 03 |
| 06. | முல்லைத்தீவு | 01 |
| 07. | மன்னார் | 01 |
| 08. | கண்டி | 01 |
| 09. | இரத்தினபுரி | 01 |
| 10. | அம்பாறை | 01 |
| 11. | கொழும்பு | 01 |
| **மொத்தம்** | | **22** |





ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய கும்பாபிஷேக வைபவம், பு ்ண்டுலோயா





திமிலை கண்ணகி அம்மன் ஆலய கும்பாபிஷேக வைபவம், சிலாபம்


## 39. இந்து சிறுவர் மற்றும் முதியோர் இல்லங்களுக்கான நிதியுதவி

இந்துச்சிறுவர் மற்றும் முதியோர் இல்லங்களை பராமரிக்கும் நிறுவனங்களின் பணிகளை ஊக்குவிக்கும் வகையில் வருடந்தோறும் வழங்கப்படும் நிதியுதவித் திட்டத்தின் கீழ், இவ்வாண்டு பின்வரும் மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 29 முதியோர் மற்றும் இந்துச் சிறுவர் இல்லங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

| **இல** | **மாவட்டம்** | **ஆலயங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 01. | மட்டக்களப்பு | 08 |
| 02. | மாத்தளை | 01 |
| 03. | கொழும்பு | 01 |
| 04. | அம்பாறை | 03 |
| 05. | முல்லைத்தீவு | 03 |
| 06. | யாழ்ப்பாணம் | 02 |
| 07. | வவுனியா | 03 |
| 08. | மன்னார் | 01 |
| 09. | திருகோணமலை | 04 |
| 10. | கிளிநொச்சி | 02 |
| **மொத்தம்** | | **28** |



பாரதி சிறுவர் இல்லம், முல்லைத்தீவு



அன்பு சிறுவர் இல்லம், முத்தையன்கட்டு

**இந்து நிறுவனங்களுக்கான நிதியுதவி**

இந்து சமய நிறுவனங்களின் புனரமைப்புக்காக நிதியுதவி அளிக்கும்செயற்பாட்டின் கீழ் இவ்வாண்டு மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையக் கட்டட திருத்த வேலைக்காகவும் மற்றும் அம்பாறையிலிருந்து கதிர்காமம் வரையிலான பாத யாத்திரைக்காகவும் நிதியுதவி வழங்கப்பட்டுள்ள

## 40. நந்திக் கொடிகள் அச்சிடலும் விநியோகமும்


வருடந்தோறும் திணைக்களத்தின் மூலம் இந்து ஆலயங்கள் மற்றும் இந்து சமய நிறுவனங்களுக்கு நந்திக் கொடிகள் அச்சிட்டு விநியோகிக்கப்படுகின்றன.

அதனடிப்படையில் இவ்வாண்டு அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ள நந்திக் கொடிகளின் விபரங்கள் பின்வருமாறு:

| இல | நந்திக் கொடிகளின் விபரங்கள் | கொடிகளின் மொத்த எண்ணிக்கை | அச்சிடப்பட்டுள்ள கொடிகளின் எண்ணிக்கை | விநியோகிக்க பட்ட கொடிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | பெரிய கொடிகள் 43'x30' | 2518 | 2518 | 2260 |
| 02 | சிறிய கொடிகள் 9' x 11' (குஞ்சம் வைக்கப்பட்டவை) | 3720 | 3720 | 2236 |
| 03 | சிறிய கொடிகள்9' x 11' (முக்கோண வடிவம்) | 5485 | 5485 | 3680 |
| 04 | தொங்கும் கொடிகள் 6' x2' (இரு நந்திகள் உள்ளவை) | 272 | 272 | 251 |
| **மொத்தம்** | | **11,995** | **11,995** | **8424** |

**இந்து சமய ஆலயங்களின் பரிபாலனத்திற்கான வழிகாட்டிக் கைநூல்**

இந்து ஆலயங்களின் பரிபாலனம் தொடர்பான சாதக பாதக நிலைமைகளைக் கருத்திற் கொண்டு ஆலயங்களை உரிய முறையில் பரிபாலனம் செய்து கொள்வதற்காக பொதுவான நியமனக் கோவைகளை உள்ளடக்கிய வழிகாட்டிக் கைநூல் 2014 ஆம் ஆண்டில் இத்திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. இந் நூலில் காட்டப்பட்டுள்ள நியமங்களை முறையாகப் பின்பற்றும் போது ஆலயங்களில் பரிபாலனம், குறித்த ஓர் வரைமுறைக்குள் சீரமைக்கப்படும் எனவும் ஆலய நிர்வாக சபை ஆலயமொன்று அமைக்கப்பட்ட நோக்கத்தைக் கருத்திற் கொண்டு இவ் நியமங்களைக் முறையாகப் பின்பற்ற வேண்டும் எனவும் இத் திணைக்களம் எதிர்பார்க்கின்றது.




# இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்

நிதி முன்னேற்ற நிலைமை2014

| | நிதி ஒதுக்கீடு 2014 (ரூ.மில்) | நிதி முன்னேற்றம் (ரூ.மில்) | % |
|---|---|---|---|
| மூலதனம் | 94.15 | 93.89 | 99.73 |
| மீண்டுவரும் | 120.66 | 118.29 | 98.03 |
| **மொத்தம்** | **214.81** | **212.18** | **98.78** |

# பிரிவுகள் ரீதியிலான நிதி முன்னேற்றம் 2014

| # | பிரிவுகள் | நிதி ஒதுக்கீடு 2014 ரூ.மில் | நிதி முன்னேற்றம் ரூ.மில் | % |
|---|---|---|---|---|
| I | இந்து அறநெறிப் பாடசாலைகளின் அபிவிருத்தி | 31.72 | 31.70 | 99.93 |
| II | இந்துசமய மேம்பாடு | 3.34 | 3.28 | 98.20 |
| III | இந்து சமய ஆராய்ச்சி | 6.60 | 6.59 | 99.84 |
| IV | இந்துக் தமிழ்க் கலைக் கலாசார மேம்பாடு | 2.50 | 2.45 | 98.00 |
| V | இந்து ஆலயங்கள் மற்றும் நிறுவனங்களின் அபிவிருத்தி | 92.90 | 92.66 | 99.74 |
| | **மொத்தம்** | **137.04** | **136.68** | **99.73** |




## திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள இந்து ஆலயங்கள், இந்துசமய நிறுவனங்கள், இந்து அறநெறிப் பாடசாலைகள்

(2014 டிசம்பர் 31 ஆம் திகதி வரை)

| இல. | மாவட்டம் | இந்து ஆலயங்கள் மற்றும் நிறுவனங்கள் | | இந்து அறநெறிப் பாடசாலை | | |
|---|---|---|---|---|---|---|
| | | ஆலயங்களின் | நிறுவனங்களின் | பாடசாலைகள் | ஆசிரியர்கள் | மாணவர்கள் |
| 01. | அனுராதபுரம் | 08 | 01 | 01 | 05 | 363 |
| 02. | பதுளை | 321 | 67 | 167 | 999 | 16,542 |
| 03. | கொழும்பு | 189 | 163 | 92 | 803 | 10,430 |
| 04. | காலி | 18 | 01 | 08 | 346 | 12 |
| 05. | கம்பஹா | 20 | 21 | 12 | 42 | 2,055 |
| 06. | ஹம்பாந்தோட்டை | 01 | 00 | 00 | - | - |
| 07. | களுத்துறை | 111 | 17 | 54 | 192 | 1,150 |
| 08. | கண்டி | 320 | 73 | 145 | 258 | 19,538 |
| 09. | கேகாலை | 220 | 21 | 82 | 218 | 4,542 |
| 10. | குருணாகல் | 34 | 09 | 09 | 34 | 143 |
| 11. | மாத்தளை | 98 | 15 | 54 | 194 | 7,261 |
| 12. | மாத்தறை | 19 | 04 | 14 | 31 | 653 |
| 13. | மொனராகலை | 24 | 06 | 05 | 15 | 121 |
| 14. | நுவரெலியா | 589 | 115 | 141 | 542 | 13,530 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 15. | புத்தளம் | 68 | 36 | 45 | 198 | 2,534 |
| 16. | பொலநறுவை | 11 | 06 | 06 | 23 | 968 |
| 17. | இரத்தினபுரி | 235 | 37 | 107 | 307 | 12,085 |
| 18. | அம்பாறை | 192 | 111 | 114 | 946 | 16,933 |
| 19. | மட்டக்களப்பு | 862 | 306 | 219 | 1,495 | 128,466 |
| 20. | யாழ்ப்பாணம் | 1526 | 313 | 245 | 1099 | 17,830 |
| 21. | கிளிநொச்சி | 200 | 19 | 69 | 192 | 5369 |
| 22. | முல்லைத்தீவு | 233 | 15 | 47 | 251 | 4,604 |
| 23. | மன்னார் | 118 | 37 | 72 | 258 | 855 |
| 24. | திருகோணமலை | 279 | 82 | 108 | 608 | 12,926 |
| 25. | வவுனியா | 352 | 33 | 71 | 415 | 5,823 |
| | **மொத்தம்** | **6,048** | **1,508** | **1,887** | **9,407** | **285,067** |

**ஆளணி விபரம் - 2014** (2014 டிசம்பர் 31 ஆம் திகதி வரை)

| இல | பதவி | தற்போதுள்ள ஆளணி | வெற்றிடமாகவுள்ள ஆளணி |
|---|---|---|---|
| 1. | பணிப்பாளர் | 01 | 0 |
| 2. | பிரதிப் பணிப்பாளர் (இ.நி.சே) | 01 | 0 |
| 3. | கணக்காளர் | 01 | 0 |
| 4. | உதவிப்பணிப்பாளர் (இ.நி.சே) | 00 | 01 |
| 5. | உதவிப்பணிப்பாளர் (இ.நி.சே அல்லாத) | 02 | 0 |
| 6. | நிர்வாக உத்தியோகத்தர் | /01* | 00 |
| 7. | நூலகர் | 01 | 0 |
| 8. | ஆராய்ச்சி அலுவலர் | 01 | 0 |
| 9. | அபிவிருத்தி உதவியாளர் | 16 | 0 |
| 10. | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 74 | 37 |
| 11. | கலாசார உத்தியோகத்தர் | 02 | 0 |
| 12. | அரச முகாமைத்துவ உதவியாளர் | 16 | 05 |
| 13. | இந்து யாத்திரிகர் விடுதி முகாமையாளர் | 01 | 0 |
| 14. | இந்து யாத்திரிகர் விடுதி உதவி முகாமையாளர் | 01 | 0 |
| 15. | சாரதி | 03 | 0 |
| 16. | இந்து கலாசார உதவியாளர் | 02 | 0 |
| 17. | தரவு நிரற்படுத்துனர் | 00 | 01 |
| 18. | கலாசார சேவையாளர் | 03 | 0 |
| 19. | அலுவலகப் பணியாளர் | 06 | 02 |
| 20. | பாதுகாப்பு அலுவலர் (இந்து யாத்திரிகர் விடுதி) | 01 | 0 |
| 21. | காவலாளி | 03 | 01 |
| 22. | அறை பராமரிப்பாளர் (இந்து யாத்திகர் விடுதி) | 01 | 04 |
| **மொத்தம்** | | **137** | **51** |

*ஒப்பந்த அடிப்படை

# இந்துப்பண்பாட்டு நிதியம்

# 2014ஆம் ஆண்டிற்கான செயற்திட்ட அறிக்கை

**அறிமுகம்**

இந்துப்பண்பாட்டு நிதியம் 1985ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க சட்டத்தின் மூலம் இந்துசமய கலாசார விடயங்களைச் சுதந்திரமாக முன்னெடுப்பதற்கென ஆரம்பிக்கப்பட்டது. இதில் 3 உத்தியோகபு‘ர்வ அங்கத்தவர்களும் கௌரவ அமைச்சரால் 5 பேரும் அங்கத்தவராக நியமிக்கப்படுவர். 2014 ஆம் ஆண்டு பின்வருவோர் இந்நிதியத்தின் அங்கத்தவர்களாக உள்ளனர்

**தலைவர்.**

திரு.எம்.கே.பீ. திசாநாயக்க,செயலாளர்,
புத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சு

**பிரதம நிர்வாக உத்தியோகத்தர்**

திருமதி.சாந்தி நாவுக்கரசன், பணிப்பாளர்,
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

**கணக்காளர்**

திரு.எம்.ஜி.காண்டீபன்,கணக்காளர்
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

**உறுப்பினர்கள்**

01. திரு.ம. சண்முகநாதன்,உதவிப் பணிப்பாளர்,இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.
02. திரு. எஸ். தனபாலா
03. திரு. என். மன்மதராஜன்
04. திரு. ஆர்.சிவகுமார்
05. திரு. எம். கதிர்காமநாதன்

**நிதி நிலை**

- இலங்கை வங்கியில் 31.12.2014 ஆம் திகதி அன்று நடைமுறைக் கணக்கில் ரூ 0.925 மில்.மிகுதியாக உள்ளது.
- இலங்கை வங்கியில் 31.12.2014 ஆம் திகதி அன்று நிலையான வைப்புக் கணக்கில் ரூ 20.514 மில். மிகுதியாக உள்ளது.


**இந்துப் பண்பாட்டு நிதியம் - செயற்றிட்டங்கள் 2014**


| செயற்பாடுகள் | நிதி ஒதுக்கீடு 2014 (ரூ.மில்) | முன்னேற்றம் - 2014.01.01 திகதி முதல் 2014.12.31 வரை | |
|---|---|---|---|
| | | நிதி முன்னேற்றம் | பௌதீக முன்னேற்றம் |
| 01. இந்து ஆலயங்கள் மற்றும் இந்து நிறுவனங்களிற்கான நிதியுதவி | 0.300 | 0.300 | 01. அறநெறிப் பாடசாலைக்கான (பொலநறுவை) மற்றும் கிண்ணியா ஊற்றடிப் பிள்ளையார் கோவில் கட்டட நிதியுதவி |
| 02. கோவில் காளை மாட்டிற்கான பராமரிப்பு | 0.060 | 0.060 | 02. நகுலேஸ்வரர் ஆலயத்திலுள்ள காளை மாட்டிற்கான நிதியுதவி |
| 03. இந்து அறநெறி ஆசிரியர்களுக்கான சீருடைத்துணி | 1.20 | 1.12 | 03. 1129 சீருடைத்துணிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. |

# இந்துக் கலைக்களஞ்சியம்


இந்து சமயத்தவர்களுக்கு இந்து சமயம், இந்து சமய வரலாறு, தத்துவம், பண்பாடு, இந்துசமயப் பெரியார்கள், நூல்கள், தலங்கள், விரதங்கள் தொடர்பான பல விளக்கங்களைத் தரும் நூலாக இது அமைகின்றது. இத் திட்டம் 1989 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2014 ஆம் ஆண்டு நிறைவுற்றது. மொத்தமாக 12 தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. அதன் விபரம் வருமாறு.


| இந்துக் கலைக்களஞ்சியத் தொகுதி | வெளியீடு செய்த ஆண்டு | கட்டுரைகளின் எண்ணிக்கை | எழுத்துக்கள் |
|---|---|---|---|
| I. | 1990 | 670 | ‘அ - ஈ’ |
| II. | 1992 | 400 | ‘உ - ஔ’ |
| III. | 1996 | 149 | ‘க’ |
| IV. | 1998 | 172 | ‘கா - கௌ’ |
| V. | 2000 | 111 | ‘ச - சா’ |
| VI. | 2003 | 111 | ‘சி - சௌ’ |
| VII. | 2005 | 205 | ‘ஞா - தி’ |
| VIII. | 2006 | 160 | ‘தி - தோ’ |
| IX. | 2007 | 130 | ‘ந - நௌ’ |
| X. | 2009 | 150 | ‘ப - பௌ’ |
| XI. | 2011 | 137 | ‘ம- மௌ’ |
| XII. | 2014 | 117 | ‘ய, ‘க்ஷ,ர,ல,ஷ,ஸ,ஸ்ரீ,ஹ, ‘வ-வௌ’ |



தொகுதி I



தொகுதி II



தொகுதி III



தொகுதி IV


தொகுதி V



தொகுதி VI


தொகுதி VII



தொகுதி VIII





தொகுதி IX




தொகுதி X




தொகுதி XI




தொகுதி XII

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட இவ் இந்துக் கலைக்களஞ்சியமே உலகில் இந்து சமயத்திற்கான விடயங்களை உள்ளடக்கிய ஒரே கலைக்களஞ்சியமாக விளங்குகின்றது. உலகில் வாழ்கின்ற அனைத்து தமிழ் பேசும் இந்து மக்களுக்கும் பயனுள்ள ஆவணமாக இக் கலைக்களஞ்சியம் விளங்குவதால் எமது திணைக்களத்தின் அனுமதியுடன் மலேசிய திருமுருகன் திருவாக்குத் திருபீடத்தின் தலைவர் தவத்திரு பாலயோகி சுவாமிகள் இக் கலைக்களஞ்சியங்களை மீள் பதிப்புச் செய்வதற்கு முன் வந்துள்ளதோடு அவற்றை 2015 இல் மீள்பதிப்புச் செய்து வெளியீடு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

## இந்து அறநெறிப்பாடசாலை மாணவர்களின் பாடநூல்கள் மறுசீரமைப்பு

அரசாங்கத்தின் கொள்கை திட்டங்களுக்கமைய 1989ஆம் ஆண்டு அறநெறிப்பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆலயம் தோறும் அறநெறிப் பாடசாலைகள் எனும் கூற்றுக்கேற்ப ஆலயங்களின் கீழ் அறநெறிப்பாடசாலைகள் தொடங்கப்பட்டு திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டது. இதற்காக பாடத்திட்டமும், நூல்களும் அச்சிடப்பட்டன.

இந்தவகையில் 2014 ஆம் ஆண்டின் இறுதியில் பாடத்திட்டமும் பாடநூல்களும் மறுசீரமைக்கப்பட்டு புதியவற்றை சேர்த்து ஒழுக்கம், விழுமியம், அறம் என்பவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நோக்கில் தரம் ஒன்று முதல் தரம் ஐந்து வரை மறுசீரமைக்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இதற்கென திணைக்களத்தினால் ஆலோசனைக்குழு ஒன்றினை அமைத்து அவர்கள் மூலம் மறுசீரமைக்கப்பட்டு வருகின்றன. இதன் முதற்கட்டமாக முதல் ஐந்து வகுப்புகளுக்கான பாடநூல்களின் மறுசீரமைப்பு நிறைவடைந்து பாடநூல்கள் தயாரிக்கப்பட்டு அச்சில் உள்ளன. அப் பாடநூல்களை மேலும் செவ்வையாக்கப்பட்டு 2015 யு‘ன் மாதம் அளவில் நூல் வடிவத்தில் வெளியிடப்படவுள்ளன.